பக்கங்கள் 23

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 21 திங்கட்கிழமை 05.01.2026 | அதிர்வு 158

## இந்திய இராணுவத் தளபதி இன்று இலங்கை வருகை!



இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் உபேந் திர திவேதி மூன்று நாட் கள் பயணமாக இன்று திங்கட்கிழமை

04 ▶





# தையிட்டிப் பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு உறுதி

## காணி உரிமையாளர்கள் பொறுமை காக்க வேண்டுமாம் இப்படிச் சொல்கின்றார் என்.பி.பி. அரசின் நீதி அமைச்சர்

“தையிட்டி திஸ்ஸ விகாரை மற்றும் அங்குள்ள மக்களின் காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு மிக விரைவில் தீர்வு காணப்படும் என்று உறுதியளிக்கின்றோம். எனவே, காணி உரிமையாளர்கள், அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயற்படாது பொறுமை காக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.”

- இவ்வாறு நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

03 ▶

# திஸ்ஸ விகாரையை இடித்தழிக்க இடமளியோம்! அங்குள்ள காணிகளையும் விடுவிக்க முடியாது!!

## மொட்டுக் கட்சி சண்டித்தனம்

யாழ். தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்ற ஒருபோதும் இடமளியோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

அதேவேளை, திஸ்ஸ விகாரையைச் சுற்றியுள்ள காணிகள் விகாரைக்குச் சொந்தமானவை என்றும், அந்தக் காணிகளை விடுவிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

தையிட்டியில் திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளில் விகாரை அமைந்துள்ள காணியைத் தவிர ஏனைய காணிகளை கட்டம்

04 ▶






தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்த வேலன் சுவாமிகள் உட்பட 15 பேருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் தாக்கல் செய்துள்ள வழக்கு இன்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

வேலன் சுவாமி உட்பட முன்னர் கைதான ஐவர் மற்றும் இப்போது மேலதிகமாக அழைப்பாணை அனுப்பி அழைக்கப்பட்டவர்கள் எல்லோருக்குமாக இன்று நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகின்றார்.

சூடான வாதப் பிரதிவாதம் இன்று நீதிமன்றத்தில் கட்டவிழும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மதத் தலைவரான வேலன் சுவாமியை பொலிஸார் கையாண்ட விதம்,

04 ▶

# செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்: சோமரத்னவை இந்த வார இறுதியில் சந்திக்கும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினர்



யாழ்ப்பாணம் – செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெறும் நோக்கில் பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியான மரணதண்டனைக் கைதி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள் இந்த வார இறுதியில் சந்திக்கவுள்ளனர்.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, அந்தப் படுகொலை குறித்தும், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் குறித்தும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இந்த விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம ஊடாக 09.07.2025 எனும் திகதியிடப்பட்ட கடிதமொன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் இழைத்த குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள், மனிதப் புதைகுழிகள் மற்றும் அவற்றுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்களின் பெயர் விவரங்கள் உள்ளிட்ட சகல உண்மைகளையும் வெளிப்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாகவும் சோமரத்ன ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய சில உண்மைகளையும், எதிர்வரும் காலங்களில் சாட்சியம் வழங்குவதற்குத் தயாராக உள்ள விடயங்களையும் உள்ளடக்கி கடந்த ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் சோமரத்ன ராஜபக்ஷ தனது சட்டத்தரணி முன்னிலையில் சத்தியக்கடதாசி வழங்கியிருந்தார்.

அந்தச் சத்தியக்கடதாசியின் ஒரு பிரதி காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் மேலும் இரு பிரதிகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கிடமும், உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் அதிகாரிகளிடமும் கையளிக்கப்பட்டன.

இவ்வாறானதொரு பின்னணியில் ஏற்கனவே கடந்த ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி சோமரத்ன ராஜபக்ஷவை வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள், கடந்த நவம்பர் மாதம் 26 அல்லது 27 ஆம் திகதி மீண்டும் அவரைச் சந்திப்பதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளரிடம் அனுமதி கோரியிருந்தனர். இருப்பினும் டித்வா சூறாவளியை அடுத்து அந்தச் சந்திப்புக்கான அனுமதி வழங்கல் தாமதமடைந்த நிலையில், இந்தச் சந்திப்பு இந்த வார இறுதியில் நடைபெறவுள்ளது.



# தெஹிவளையில் அடிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்பு!

தெஹிவளையில் அடிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தெஹிவளைப் பகுதியில் உள்ள ஒரு பணியிடத்தின் முன் நேற்று இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தாக்குதலின் விளைவாக மேற்படி நபர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தெஹிவளை, சஞ்சயபுர – மருத்துவ வீதியைச் சேர்ந்த நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்கிஸை நீதிவான் கீத்மா பெர்னாண்டோ இந்த விவகாரம் குறித்து நீதிவான் விசாரணையை நடத்தியுள்ளார்.

# கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் கோயில் விவகாரத்தில் இணக்கத்துக்கு முரணாக நடந்தால் நீதிமன்றம் செல்வோம்

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு




**(எஸ். கீதபொன்கலன்)**

திருகோணமலை, கன்னியா பிள்ளையார் கோயில் இருந்த பகுதியில் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியோடு வழக்கிலே இணங்கிக் கொண்டதற்கு மாறான செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும், அதனை நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தவுள்ளதாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கன்னியா வெந்நீரூற்று பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சில வருடங்களுக்கு முன்னர் கன்னியா வெந்நீரூற்றில் இருந்த 150 வருடங்களுக்கு மேல் பழமையான பிள்ளையார் கோயிலை மீளவும் புனரமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது அது தொல்லியல் திணைக்களதத்தால் அந்தப் பகுதியில் கட்டுமானப் பணிகள் எதுவும் செய்ய முடியாது எனத் தடுக்கப்பட்டிருந்தது. பின்னர் அந்தப் பகுதியிலே பௌத்த கொடி நடப்பட்டு பௌத்த விகாரை அமைப்பதற்கான பணி முன்னெடுக்கப்பட்டு வந்த வேளையில் குறித்த பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவான கோகிலரமணி என்பவரால் திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கில் நான் முன்னிலையாகி குறித்த கட்டுமானப் பணிக்கு இடைக்காலத் தடை உத்தரவையும் பெற்றிருந்தேன்.

இறுதியிலே தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் இது சம்பந்தமாக நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியபோது அதில் பண்டைய விகாரை ஒன்று இருந்தது என்றும், அதற்குரிய ஆதாரங்களும் நீதிமன்றத்துக்குக் காண்பிக்கப்பட்டது.

இதேவேளை 150 வருடங்களுக்கு மேலாக அவ்விடத்தில் பிள்ளையார் கோயில் இருந்ததற்கான ஆதாரங்களும் எம்மால் நீதிமன்றத்துக்குக் காண்பிக்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டது. பண்டைய விகாரை அங்கே இருந்திருந்தால் அதனைப் பேணிப் பாதுகாக்கின்ற பொறுப்பு தொல்லியல் திணைக்களத்துக்கு இருக்கின்றது. ஆனால் மீள் கட்டுமானங்கள் எவையும் செய்ய முடியாது.

இதேவேளை 150 வருடங்களுக்கு மேலாக அவ்விடத்தில் பிள்ளையார் கோயில் இருந்ததன் காரணமாக அந்த இடத்திலேயே இன்னுமொரு இடம் அளவீடு செய்து அடையாளப்படுத்தப்பட்டு அதிலே பிள்ளையார் கோயிலை மீளவும் கட்டலாம் என நீதிமன்றத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்டு குறித்த வழக்கு முடிவுறுத்தப்பட்டது.

அந்த இணக்கப்பாட்டுக்கு மாறாக இப்போது சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதான சில முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. இது தொடர்பில் காணி உரிமையாளரான கோகிலரமணி அம்மா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றார். அத்துடன் வழக்கில் இரண்டாவது பிரதிவாதியாக இருந்த அரசாங்க அதிபருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு அளித்திருக்கின்றார்.

நானும் இன்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனுடன் சென்று அதனைப் பார்வையிட்டிருந்தேன். பண்டைய விகாரை இருந்ததாகச் சொல்லப்படுகின்ற அந்த மேட்டிலே அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கு மேலதிகமாக வேறு சில நடவடிக்கைகள் எடுக்கப்படுவது தென்படுகின்றன. இது நீதிமன்றத்தில் இணங்கிய இணக்கப்பாட்டுக்கு மாறாக தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியோடு இது நடைபெறுவது போன்று தென்படுவதன் காரணத்தால் உடனடியாக நீதிமன்றத்துக்கு இதனைத் தெரியப்படுத்துவது என்று தீர்மானத்தை எடுத்துள்ளோம். இது தொடர்பாக காணி உரிமையாளரான கோகிலரமணி அம்மாவுடன் பேசியிருக்கின்றோம். இந்த வழக்கில் பதிவு பெற்ற சட்டத்தரணி பிரசாந்தினி உதயகுமாரும் சமூகமாகியிருந்தார்.”

– என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தையிட்டிப் பிரச்சினைக்கு...**

”தையிட்டியை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் நோக்கம் எமக்குக் கிடையாது. தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சியினரும் இந்த விவகாரத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதை நிறுத்த வேண்டும்.

இது தையிட்டி காணி உரிமையாளர்களுக்கும் திஸ்ஸ விகாரையின் விகாராதிபதிக்கும் இடையிலான பிரச்சினை. இதில் வேறு தரப்பினர் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு மேற்படி இரு தரப்புகளும் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும். இது இலகுவான காரியம்.

எமது அரசு இந்த விடயத்தில் ஆழ்ந்த கரிசனை செலுத்தியுள்ளது. இரு தரப்புகளும் இணக்கத்துக்கு வருவதற்கான வழிவகைகளை அரசின் விசாரணைக் குழு செய்யும்.

எனவே, தையிட்டி திஸ்ஸ விகாரை மற்றும் அங்குள்ள மக்களின் காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு மிக விரைவில் தீர்வு காணப்படும் என்று உறுதியளிக்கின்றோம். இந்த விவகாரத்தில் வேறு தரப்பினர் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கின்றோம். அதேவேளை, தையிட்டி காணி உரிமையாளர்கள் பொறுமை காக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம். அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் காணி உரிமையாளர்கள் செயற்படக்கூடாது.”

– என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

அவருக்கு எதிராகப் பொலிஸாரால் பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள் போன்றவை இன்று நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளால் சுட்டிக்காட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளூராட்சி சபை பிரதேசம் ஒன்றில் சபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாகக் கட்டப்படும் கட்டமைப்புகள் தொடர்பில் எச்சரிக்கை அறிவித்தல் ஒட்டி, அது பற்றி அறிவிக்கும் அதிகாரம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தைப் பிரதேச சபைத் தலைவரோ, செயலாளரோ பிரயோகிப்பர்.

அப்படி இருக்கையில் சட்டவிரோதக் கட்டுமானமான தையிட்டி விகாரையின் பக்கத்தில் அத்தகைய சட்டவிரோத கட்டுமானம் பற்றிய அறிவித்தலை பிரதேச சபை நடுமானால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற கருத்தில் பொலிஸார் வலி வடக்குப் பிரதேச சபையின் செயலாளருக்கு கொடுத்துள்ள 'மிரட்டல்' அறிவித்தல் இன்று நீதிமன்ற விசாரணையின் போது சில சமயங்களில் மன்றின் கவனத்துக்கு எடுக்கப்படும் வாய்ப்பு உண்டு

அது பற்றி தெளிவான அறிவுறுத்தல் ஒன்றை – சட்ட வியாக்கியானம் அல்லது விளக்கத்தை – ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் இன்று பொலிஸாருக்கு நீதிமன்ற முகதாவில் வழங்குவார் என்றும் எதிர்பார்க்க முடியும்.

* * *

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் கூட்டம் நேற்று மாலை மட்டக்களப்பு சின்ன உப்போடையில் மாவட்டத் தலைவர் சாணக்கியன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிநேசன், மருத்துவர் சிறிநாத், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், முன்னாள் மட்டக்களப்பு மாநகர மேயர் சரவணபவன், கட்சியின் வாலிப முன்னணியின் தலைவர் சேயோன் உட்பட சுமார் 40 பேர் வரை இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வாலிப முன்னணி நடத்திய மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வில், ஏற்கனவே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனை ஈகச் சுடர் ஏற்ற மேடைக்கு அழைத்த விவகாரம் தமிழரசு கட்சிக்குள் வாத விவாதங்களை ஏற்படுத்தியிருந்த பின்புலத்தில், நேற்றைய கூட்டத்திலும் இது பற்றி மேலோட்டமாக பேசப்பட்டதாகத் தெரிய வந்தது.

அச்சமயத்தில் தலைமைக் கதிரையில் இருந்த சாணக்கியன் எம்.பி., தமக்கு பக்கத்தில் இருந்த சிறிநேசன் எம்.பிக்கு, ஏற்கனவே கட்சியிலிருந்து அரியநேத்திரனை வெளியேற்றுவது என்று எடுக்கப்பட்ட முடிவு தொடர்பாக அவருக்குக் கட்சி செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியை தமது கைத்தொலைபேசியில் இருந்து எடுத்துக்காட்டினார்.

இக்கடிதம் பதிவுத்தபாலில் தமக்கு கிடைக்கவில்லை என்று அரியநேத்திரன் கூறுகிறார் என்ற சாரப்பட சாணக்கியனின் காதுக்குள் சிறிநேசன் கிசுகிசுத்தார் எனத் தெரிகிறது.

அது குறித்து அரியநேத்திரன் கட்சியின் தலைமையுடன் பார்த்துக் கொள்ளட்டும், அது எங்களுக்குரிய விடயம் அல்ல என்று விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தார் சாணக்கியன் என அறிய வந்தது.

உளளூராட்சி உறுப்பினர்களின் செயல்பாடுகள் தொடர்பாகவும் அவர்களை வழிநடத்துகின்ற வழிகாட்டல்கள் தொடர்பாகவும் இறுக்கமான சில நடைமுறை உத்தரவுகளை இந்தக் கூட்டத்தில் சாணக்கியன் வழங்கினார் என்றுன் அறிய வந்தது.

கூட்டம் பெரும்பாலும் கலந்துரையாடல் பாணியில் நடைபெற்றது. ஆங்காங்கே விவாதங்கள் இடம் பெற்ற போதிலும் பயனுள்ள – ஆரோக்கியமான விடயங்கள் விவாதிக்கப்பட்ட – கூட்டமாக அது அமைந்ததாக கூட்டத்தில் பங்குபற்றிய இளைஞர் பிரதிநிதி ஒருவர் பின்னர் தெரிவித்தார்.

* * *

பங்களாதேஷில் காலமான அதன் முன்னாள் பிரதமர் பேகம் காலிதா ஸியாவின் இறுதி நிகழ்வில் பங்குபற்றுவதற்காக இலங்கை வெளி விவகார அமைச்சர் விஜித்த ஹேரத் கடந்த டிசம்பர் 31ஆம் திகதி பங்களாதேஷ் சென்றாராயினும் இறுதி நிகழ்வில் அவரால் பங்குபற்ற முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அன்றைய தினம் காலை 9:20 க்கு கட்டுநாயக்காவிலிருந்து புறப்பட்ட விமானம் மதியம் ஒரு மணிக்கு டாக்கா போய் சேர்ந்தது. இறுதி நிகழ்வுகள் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாக இருந்த நிலையில், விமான நிலையத்திலிருந்து பொலிஸ் காவலோடு புறப்பட்ட அமைச்சர் குறிப்பிட்ட நேரத்தில் இறுதி நிகழ்வுகள் நடைபெறும் இடத்தைச் சென்றடைய முடியவில்லை என்று கூறப்படுகிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மாத்திரமன்றி இந்தியா, நேபாளம், மாலைதீவு, பூட்டான் ஆகிய நாடுகளின் அமைச்சர்களுக்கும் இதே நெருக்கடி ஏற்பட்டது.

மறைந்த தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பல்லாயிரம் பேர் ஒரே சமயத்தில் வீதிகளுக்கு வந்தமையால், பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் வெளிநாட்டுப் பிரமுகர்களை அழைத்து வந்த வாகன தொடரணிகளை நேரத்தோடு உரிய இடத்திற்கு அனுப்பி வைக்க முடியவில்லை என்று அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகின்றது.

உரிய சமயத்தில் இறுதி நிகழ்வில் பங்குபற்ற முடியாத காரணத்தினால் அமைச்சர் விஜித்த ஹேரத்தும் ஏனைய வெளிநாட்டு பிரமுகர்கள் பலரும் பின்னர் தனிப்பட்ட முறையில் பேகம் காலிதா ஸியாவின் குடும்பத்தவர்களைச் சந்தித்து தங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டனர்.

---

**திஸ்ஸ விகாரையை...**

கட்டமாக விடுவிக்கப்படும் என்று காணி உரிமையாளர்களுடன் அண்மையில் நடத்திய கலந்துரையாடலின்போது யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் உறுதியளித்திருந்தார். எனினும், இது தங்கள் போராட்டத்தை மலினப்படுத்தித் தங்களை ஏமாற்றும் அரசின் திட்டம் என்றும், காணிகளை முழுமையாக விடுவிக்கும் வரை தங்கள் போராட்டம் தொடரும் என்றும் நேற்றுமுன்தினம் தையிட்டியில் நடைபெற்றபோராட்டத்தின்போதுகாணிஉரிமையாளர்கள் தெரிவித்திருந்தார்கள்.

அதேவேளை, மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைப்பதில் எதற்காகவே கட்டம் கட்டமான நடவடிக்கை இடம்பெற வேண்டும்? என்று கேள்வி எழுப்பியிருந்த நயினாதீவு நாக விகாரையின் விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ, திஸ்ஸ விகாரை அமைந்துள்ள ஒரு குறிப்பிட்ட மிகச் சிறிய பகுதியை எடுத்துக்கொண்டு ஏனைய பகுதிகள் அனைத்தும் ஒரே தடவையில் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும், மக்களை ஏமாற்ற வேண்டாம் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஜானக வக்கும்புர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டில் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை என்பது தமிழ் மக்களுக்கும், தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தெரியாதா? தையிட்டி திஸ்ஸ விகாரையில் எவரும் கைவைக்க முடியாது. அதை அகற்ற ஒருபோதும் இடமளியோம். திஸ்ஸ விகாரையைச் சுற்றியுள்ள காணிகள் விகாரைக்குச் சொந்தமானவை. அந்தக் காணிகளை அரசு விடுவிக்கக்கூடாது.

அதேவேளை, தையிட்டி விகாரை விடயம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள விகாராதிபதிகள் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். அவர்கள் தனிப்பட்ட ரீதியில் கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்." – என்றார்.

---

**இந்திய இராணுவ...**

இலங்கை வருகின்றார்.

இலங்கை இராணுவத்தினரால் மரியாதை அணிவகுப்புடன் அவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்படவுள்ளது.

இந்திய இராணுவத் தளபதியுடன் மேலும் சில உயர்மட்ட அதிகாரிகள் கொழும்பு வரவுள்ளனர். எதிர்வரும் வியாழக்கிழமை வரை அவர்கள் நாட்டில் தங்கி இருப்பார்கள்.

இலங்கை இராணுவத் தளபதி, பாதுகாப்பு பிரதி அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருடன் இந்திய இராணுவத் தளபதி பேச்சு நடத்துவார் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, ஜெனரல் உபேந்திர திவேதி, புத்தலவில் உள்ள பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியில் உரை நிகழ்த்தவுள்ளார்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் மீட்பு நடவடிக்கைக்கு இந்திய இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்கி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அண்மையில் இலங்கை வந்து சென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வெனிசுலா மீதான

# அமெரிக்காவின் தாக்குதலை அங்கீகரிக்கவே முடியாதாம்!

### முன்னாள் அமைச்சர் ராஜித கூறுகின்றார்



வெனிசுலா மீதான அமெரிக்காவின் தாக்குதலை யாராலும் அங்கீகரிக்க முடியாது என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர்,

“அமெரிக்காவின் இத்தகைய நடவடிக்கைகளை நியாயப்படுத்த முடியாது. இது தொடர்ந்தால், எந்த நாடும் விருப்பப்படி மற்றொரு நாடு மீது படையெடுக்கலாம்.

இருப்பினும், வெனிசுலாவின் உள்நாட்டுப் பிரச்சினைகள் தற்போதைய நெருக்கடிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளது.

வெனிசுலா தீவிர சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தியிருக்கக்கூடாது.

மாறாக, கடுமையான சோசலிசத்தை விட சமூக ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் சீனா போன்ற நாடுகள் எடுத்த பாதையை வெனிசுலா பின்பற்றியிருக்க வேண்டும்.

நிலையற்ற தன்மை மற்றும் வெளிப்புற தலையீட்டைத் தவிர்க்க சமநிலையான பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் அவசியம்.” – என்றார்.







# புலிகளைத் திருப்திப்படுத்தவே டக்ளஸ், பிள்ளையான் கைது!

### நாமல் கண்டுபிடிப்பு

“புலம்பெயர் நாடுகளில் உள்ள விடுதலைப்புலிகளைத் திருப்திப்படுத்தவே டக்ளஸ், பிள்ளையான் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.” – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“விடுதலைப்புலிகளின் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடி, ஜனநாயக வழியில் அரசியலுக்கு வந்தவர் தான் டக்ளஸ் தேவானந்தா. மக்களின் வாக்குகள் மூலம் நாடாளுமன்றத்துக்கு வந்து, மக்களுக்கு வந்து சேவையாற்றியுள்ளார். இவ்வாறிருக்கையில் தற்போது அவரைக் கைது செய்தமை அவசியமற்றது.

புலம்பெயர் புலிகளைத் திருப்திப்படுத்தவே பிள்ளையானும், டக்ளஸும் கைது செய்யப்பட்டுள்ளனர். பல வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட துப்பாக்கி தொடர்பிலேயே டக்ளஸ் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வளவு நாள் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?. எனவே, அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஆபத்தான முன்னுதாரணம்

தேர்தல் காலத்தில் தான் அடிக்கடி வலியுறுத்தி வந்த வாக்குறுதிகளில் ஒன்றான - நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒய்வூதியத்தை ரத்துச் செய்கின்ற நடவடிக்கையை-தேசியமக்கள்சக்திஅரசுஇப்போது தீர்க்கமாக முன்நகர்த்துகின்றது.

ஏற்கனவே இது தொடர்பான சட்ட மூலம் தயாரிக்கப்பட்டு, அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், தற்போது அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தை சட்டரீதியான சவாலுக்கு உட்படுத்த விரும்புகின்ற தரப்பினர் அடுத்த இரண்டு வார காலத்துக்குள் உயர் நீதிமன்றத்தில் இந்த சட்டமூலத்திற்கு எதிராக மனு செய்ய முடியும். உயர்நீதிமன்றம்அதனைப்பரிசீலனைசெய்து முடிவை அறிவிக்கும்.

1977ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்ற ஒய்வூதிய சட்டத்தை ரத்து செய்யும் வகையில் புதிய சட்டமூலம் ஒன்றே வர்த்தமானியில் தற்போது பிரசுரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களது இணையர் மற்றும் தங்கியிருப்போர் பெற்று வந்த ஒய்வூதியம் இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் உடனடியாக நிறுத்தப்படும்.

சரியோ, பிழையோ கடந்த சுமார் 50 ஆண்டுகளாக இத்தகைய ஒய்வூதியம் தங்களுக்கு உள்ளது என்ற ஏற்பாட்டோடுதான் நாடாளுமன்ற தேர்தல்களிலும், அரசியலிலும் அவர்கள் ஈடுபட்டார்கள். நாடாளுமன்றுக்குதெரிவுசெய்யப்பட்டுபணியாற்றி வந்தார்கள். திடீரென்று ஒருதலைப் பட்சமாக அரசு முடிவெடுத்து, அவர்களது ஒய்வூதியத்தைநிறுத்துவதுஎன்பதுசட்ட மற்றும் தார்மீக ரீதியில் சரியானதா என்று கேள்வி எழுகின்றது. அவர்களின் சேவைக்காலத்தில்அவர்களோடு செய்யப்பட்ட உடன்பாட்டை அரசு ஒருதலைப் பட்சமாக மீற முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. இதையொட்டி, இந்தச் சட்டமூலத்தின் மீது உயர்நீதிமன்றத்தில் நிச்சயமாக சட்ட விவாதங்கள் நடக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

அரசியல்வாதிகளின் ஒய்வூதியம்தானே, அதனை வெட்டுவது சரிதானே, அது குறித்து அலட்டிக் கொள்ளாமல் இருக்கலாம் தானே என்று பொதுமக்கள் நினைக்கலாம். ஆனால் இது ஓர் ஆபத்தான முன்னுதாரணம் என்பதை பொது மக்கள் மறந்து விடக் கூடாது.

வருங்காலத்தில் வரக்கூடிய எந்த அரசும், நிதி நெருக்கடி கருதியோ அல்லது வேறு காரணங்கள் கருதியோ, இதுவரை காலமும் அரச ஊழியர்களுக்கு வழங்கி வந்த ஒய்வூதியத்தை தன் இஷ்டப்படி ஒருதலைப்பட்சமாக முடிவு எடுத்து நிறுத்த முடியும். அதற்கான முன்னுதாரணமாக இந்த சட்டம்மூலம் நடைமுறைக்கு வருவது அமையப் போகின்றது.

அரசியல்வாதிகளின் ஒய்வூதியம்தானே என்று பொதுத் தரப்புக்கள் வாளாவிருந்தால், சில சமயங்களில் அது பிற்காலத்தில் அரச ஊழியர்களுக்கு எதிராகவும் இலகுவாக - சுலபமாக - திரும்ப முடியும். இதை எதிர்க்காமல் அனுமதித்து, முன்னுதாரணமாக ஏற்றுக் கொண்டு விட்டு, அப்போது அதனை எதிர்ப்பது நெருக்கடியானதாகவும், நியாயமற்றதாகவும் இருக்கும்.




# இன்று 59 வருடங்களை நிறைவு செய்யும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

கடந்த டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதியன்று தானே இலங்கை வானொலி நூறாண்டு நிறைவைக் கொண்டாடியது. இந்த நிலையில் 59 வருடங்கள் நிறைவு என்பது எப்படி சாத்தியமாகும்? என பலரும் நினைக்கலாம்.

இலங்கையில் ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டு நூறு வருடங்கள் கடந்து விட்டன என்பது உண்மைதான். ஒலிபரப்புச் சேவையுடன் இணைந்து தோற்றம்பெற்ற பெருமைக்கு உரிய இலங்கை வானொலி, நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறது என்பதும் அனைவரும் அறிந்த விடயம்.

இதேவேளையில், ஒலிபரப்புச்சேவையின்வரலாற்றுப் பாதையைத் திரும்பிப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும். 1925 டிசெம்பர் 16ஆம் திகதி ஆரம்பமான ஒலிபரப்புச் சேவை, ஆரம்பத்தில் 'கொழும்பு வானொலி' (Radio Colombo) என அழைக்கப்பட்டது.

தபாற், தந்தி திணைக்களத்தின் ஒரு பிரிவாக இயங்கி வந்த ஒலிபரப்புச் சேவை, தனியான தொரு திணைக்களமாக அமைக்கப்பட்டு அதன் நிர்வாகத்தின் கீழ் 1949 ஒக்ரோபர் முதலாம் திகதியில் இருந்து செயற்படத் தொடங்கியபோது 'இலங்கை வானொலி' (Radio Ceylon) என அழைக்கப்பட்டு வந்தது.

இலங்கையின் ஒலிபரப்புச் சேவையை புனரமைக்கும் வகையில் 1965 ஜூலை மாதம், அப்போதிருந்த பிரதமர் டட்லி சேனநாயக்கா தலைமையிலான அரசால் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. பிரபல பத்திரிகையாளரான கேர்பட் ஹூலுகல தலைமையிலான இந்த விசாரணைக் குழுவில் வண. கெட்டிமுல்லே வஜிரபுத்தி தேரர், டி.பி. எல்லேபொல, எஸ். இராஜநாயகம், பி. நிசங்க, ஏ. செய்யத் அஹமட் ஆகியோர் அங்கம் வகித்தார்கள். பலரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைய இலங்கை வானொலியை ஓர் அரச கூட்டுத்தாபனமாக மாற்றப்பட வேண்டும் என மேற்படி விசாரணைக்குழு பரிந்துரை செய்திருந்தது.

இது தொடர்பான சட்டமூலம் 1966 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதுடன், அது 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.




இதன்படி, 1967 ஜனவரி மாதம் 5 ஆம் திகதியன்று 'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்' உதயமானது. அன்றைய தினம், அப்போதிருந்த பிரதம மந்திரி டட்லி சேனநாயக்கா, ஒலிபரப்பு அமைச்சர் ஆர். பிரேமதாச ஆகியோரால் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் நாயகமாக நெவில் ஜயவீர நியமிக்கப்பட்டார்.

'இலங்கை வானொலி' என்ற பெயரில் இயங்கி வந்த ஒலிபரப்புச் சேவை, அதன் நிர்வாகக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்துக்கமைய 'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்' என்று பெயர் சூட்டப்பட்டதன் ஆண்டு நிறைவு தினமே இன்றாகும்.

இலங்கையில் ஒலிபரப்புச் சேவையை முன்னெடுத்துச் செல்லும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இன்று 59 வருடங்களை நிறைவு செய்து கொண்டு, 60 ஆவது வருடத்தில் கால்பதிக்கிறது என்பது ஒலிபரப்புத்துறை வரலாற்றில் மற்றுமொரு சிறப்பு நிகழ்வாக அமைகிறது.

**- ஊரெழு அ.கனகசூரியர் -**




# தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரித்தானியாவில் கண்டனப் போராட்டம்

கடந்த டிசம்பர் 21 ஆம் திகதியன்று இடம்பெற்ற தையிட்டி போராட்டத்தின் போது மதகுரு வேலன் சுவாமி உட்பட 5 தமிழர்கள் கைது செய்யப்பட்டமையை கண்டித்து பிரித்தானியாவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டம் பிரித்தானியா பிரதமர் அலுவலகத்தின் முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தாயகத்தில் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக தமிழ் மக்களால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டத்தில் கடந்த டிசம்பர் 21 ஆம் திகதி அன்று வேலன் சுவாமி உட்பட 5 தமிழர்கள் இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அதனை கண்டித்தும், தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரியும் தாயகத்தில் நேற்று நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் பிரித்தானியாவில் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

போராட்டத்தில் கலந்து கொள்ளும் அனைவரின் கையெழுத்துடன் இந்தவிடயம் தொடர்பான மனு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அனைத்து வெளிநாட்டு தூதரகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.













# இராமநாதன் கல்லூரி அரசுடைமையான பின் அதன் தரம் குறைந்து கொண்டே செல்கிறது

## கல்வி அபிவிருத்தி குழுமத்தின் காப்பாளர் விசனம்

(த.சுபேசன்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அரசாங்கத்தினால் தேசியமயமாக்கப் பட்டதன் பிற்பாடு அதனுடைய தரம் குறைந்து கொண்டே செல்கின்றது என கல்வி அபிவிருத்தி குழுமத்தின் காப்பாளர் நடராசா சச்சிதானந்தன் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத் துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

சேர்.பொன் இராமநாதனினால் இலங்கையில் சைவப் பெண்களுக் காக உருவாக்கப்பட்டதே இராமநாதன் கல்லூரியாகும். இந்த கல்லூரிக்காக இராமநாதன் தனது பெருந்தொகையான காணிகளை விட்டுச் சென்றுள்ளார்.

ஒரு காலத்தில் இந்தக் கல்லூரி யில் சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் மாணவியர்கள் வந்து கல்லூரி விடுதிகளில் தங்கி படித்துள்ள னர். அரச சேவைகளிலும் மற்றும் உயர் பதவிகளிலும் பணியிலிருந்த ஆண்கள் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்ற பெண்களை விரும்பி திருமணம் செய்த நிலைமையும் காணப்பட்டது. அந்தக் காலத்தில் கல்லூரியில் திருமதி இராம நாதன், திருமதி பிள்ளை போன்ற அதிபர் களுடைய அர்ப்பணிப்பு ஒரு பிரதான காரணமாக இருந்தது.

லேடி இராமநாதன் ஓர் ஆங்கிலே



யராக இருந்த போதிலும் அவர் தன்னை சைவசமயத்திற்கு மாற்றி கல்லூரிக் கும், சைவத்தமிழுக்கும் அளப்பரிய சேவையை ஆற்றியிருந்தார்.

ஆனால் அதன் பிற்பாடு அரசாங்கம் கல்லூரியை தேசியமயமாக்கியதன் பிற் பாடு கல்லூரியினுடைய தரம் குறைந்து கொண்டே செல்கின்றது. குறிப்பாக கல் லூரியின் காணிகள் கல்வி இலாக்கா வின் தேவைக்காகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலை பீடத்தின் தேவைக்காகவும் சுவீகரிக்கப்பட்டன. மேற்படி காணிக்காக கல்லூரிக்கு எந்த விதமான நிதியும் வழங்கப்பட்டதாக தெரியவில்லை.

தற்சமயம் கல்லூரிக்கு பலவிதமான தேவைகள் உண்டு. கல்லூரி புல்லும் புதருமாக இடிந்த கட்டடங்களுடனும் காணப்படுகின்றன.

இந்நிலையில் அண்மையில் லேடி இராமநாதன் அவர்களுக்கு 7 லட்சம் ரூபா செலவில் சிலை எழுப்பப்பட்டுள்ளது. கல்லூரி இருக்கும் நிலையில் தனக்கு சிலை நிறுவப்பட்டதை லேடி இராம நாதன் விரும்பியிருக்கமாட்டார். சைவப் பெருமக்கள் இதனைகவனத்தில்கொள்ள வேண்டும். - என அவர் மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# வாழைச்சேனை புனாணை வனவிலங்கு காரியாலயம் உடைத்து துப்பாக்கி உட்பட பொருள்கள் அபகரிப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு புனாணை வனவிலங்கு காரியாலயத்தை உடைத்து அங்கிருந்த ஷொட்கண் துப்பாக்கி ஒன்று மற்றும் ட்ரில்லர் இயந்திரம் உட்பட்ட பொருள் கள் அபகரிக்கப்பட்டுள்ள சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள் ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை - கொழும்பு வீதி யில் புனாணையில் அமைந்துள்ள வன விலங்கு பாதுகாப்பு காரியாலயத்தில் கடமையாற்றி வருபவர்கள் வழமைபோல வெள்ளிக்கிழமை மாலையில் கடமை முடிந்ததும் பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்று அடுத்த நாள் சனிக்கிழமை காலையில் காரியாலயத்துக்கு வந்தபோது அங்கு காரியாலயத்தின் கதவு உடைக்கப்பட் டுள்ளமையைக் கண்டு பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

காரியாலயத்தின் கதவு உடைக் கப்பட்டு காரியாலயத்துக்குள் நுழைந்து அங்கிருந்த ஷொட்கண் துப்பாக்கி ஒன்று, அதற்கான 3 தோட்டாக்கள், துளையிடும் கருவியான ட்ரில்லர் ஒன்று, எரிவாயு அவன் ஒன்று ஆகிய பொருள்கள் திருடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை வாழைச்சேனை பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# மதுபோதையில் பஸ்ஸை செலுத்திய இ.போ.ச. சாரதி வழிமறித்துக் கைது

## ஊர்காவற்றுறை பொலிஸார் நடவடிக்கை

ஊர்காவற்றுறை – யாழ்ப்பாணம் அரச பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வழித்தடம் 777 இல் இலங்கைப் போக்குவரத்து சபையின் சாரதி ஒருவர் மதுபோதையில் பஸ்ஸைச் செலுத்திச் சென்ற நிலையில் நேற்று ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ் – ஊர்காவற்றுறை வீதியின் அல்லைப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து பொலிஸாரிடம் வினவிய போது –

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஊர்காவற்றுறை–யாழ்ப்பாணம் இடையிலான சேவையை முன்னெடுக்கும் வழித்தடம் 777 இலக்க பஸ்ஸைச் செலுத்திச் சென்ற சாரதியே சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த அரச பஸ் அதி வேகத்தில் அதிகளவான பயணிகளுடன் செல்வதை அவதானித்த ஊர்காவற்றுறை போக்குவரத்து பொறுப்பதிகாரி சமன் குமார தலைமையிலான பொலிஸ் அணியினர் பஸ்ஸை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

சோதனையின் போது சாரதியிடம் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதிருந்துள்ளது. அத்துடன் அவர் நிறை போதையில் இருந்தமையை அவதானித்த பொலிஸார் அவரை மது போதையில் சாரதித்துவம் செய்தமை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை உள்ளிட்ட காரணங்களுக்காக கைது செய்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

பொலிசாரின் விசாரணைகளின் பின் சாரதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பருத்தித்துறை நீதிமன்றினால் 600 கிலோ கஞ்சா தீக்கிரை!



சட்ட நடவடிக்கைகாகக் கைப்பற்றப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த அறுநூறு கிலோ கஞ்சாவை அழிக்கும் நடவடிக்கை நேற்று இடம்பெற்றது.

இந்தியாவில் இருந்து கடல் வழியாக கடத்தி வரப்பட்ட கேரளாக் கஞ்சா பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறான அறுநூறு கிலோ கஞ்சா நேற்றுப்பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் அழிக்கும் நடவடிக்கை இடம்பெற்றது.

பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான வெலிக்கண்டி குப்பை திடலில் வைத்து அது தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.



# மன்னார் பேசாலையில் மூவியரசர் விழா

(மன்னார் நிருபர்)

மன்னார் மறை மாவட்டத்தில் பேசாலையில் மூவியரசர் விழா நேற்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

வருடம் ஒருமுறை சிம்மாசனத்தில் இருந்து இறக்கப்படும் புதுமை மிக்க வெற்றி அன்னையின் திருச்சுரூபம், குழந்தைப் பேறு இல்லாத குடும்பங்களின் கையில் திரு பாலனின் திருச்சுரூபம் ஏந்த வைத்து ஆசீர்வதிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

வருடப் பிறப்புக்கு அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை திருஅவையானது மூவியரசர் பெரு விழாவைக் கொண்டாடி வருகிறது.

இத்தினத்தில் புதுமை மிக்க மூவியரசர் பட்டினம் என அழைக்கப்படும் பேசாலை பகுதியின் பாதுகாவல் தாயாம் புனித வெற்றி அன்னையின் திருச்சுரூபம் வருடத்தில் ஒரு முறை சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டு விசேட ஆசீர் பெறும் நிகழ்வாக இது அமைந்து வருகிறது.

இதன் போது மன்னார் மற்றும் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல ஆயிரக்கணக்கான மக்கள் குடும்பம் குடும்பமாக வந்து ஆசி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# இறக்குவானை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு நேற்று அடிக்கல்

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நட்டு வைத்தார்

(பொகவந்தலாவ நிருபர்: எஸ்.சதீஸ்)

இறக்குவானை நகரில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலையில் ஒரு கோடி 7 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கபடவுள்ள புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நேற்று நாட்டினார்.

அத்துடன், “வளமான நாடு, அழகான வாழ்க்கை” என்ற தொனிப் பொருளுக்கமைய கொடக்கவெல பிரதேச சபைக்குட்பட்ட இறக்குவானை வடக்கு, பெரிய பாராவத்தை, ஸ்ப்ரிங்வூட் தமிழ் வித்தியாலத்திற்கு அருகில் அமைந்துள்ள பாதை சுமார் ஒன்றரைக் கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டீல் புனரமைக்கப்பட்டு நேற்றைய தினம் பொது மக்கள் பாவனைக்காகப் பிரதியமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தின் பெருந்தோட்ட பகுதியில் உள்ள பாதைகளை புனரமைப்பதற்கு வரவு – செலவுத் திட்டத்தில் 7 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு அமைய மாவட்டத்திலே 87 தோட்டப் பிரதேசங்களிலே காணப்படுகின்ற வீதிகளைப் புனரமைக்கும் பணிகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன எனவும் பிரதி அமைச்சர் அங்கு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கொடக்கவெல பிரதேச சபை தவிசாளர் குலரத்ன தந்தெனிய, பிரதேச சபை உறுப்பினர்களான அப்துல்லா ராஜமாணிக்கம், நிமந்திகா பெரேரா மற்றும் இறக்குவானை தேசிய மக்கள் சக்தி பிரதேச அமைப்பாளர் குமுது ஆகியோர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.













# வனத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள வெல்வேரி காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்படும்

## நேரில் பார்வையிட்ட பின் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா உறுதி

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை வெல்வேரி பகுதியில் வனவள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களுடைய காணிகளை விரைவில் அவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா உறுதியளித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கழமை வெல்வேரி கிராமத்திற்கு கள விஜயம் மேற்கொண்டு பார்வையிட்ட பின்னரே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

“இன்றையதினம் திருகோணமலை மாவட்ட பட்டணமும் சூழலும் பிரதேச செயலகதிற்கு உட்பட்ட வெல்வேரி கிராமத்திற்கு கள விஜயம் மேற்கொண்டேன். இப்பகுதி மக்கள் பல வருடங்களுக்கு முன்னர் வன்செயலின் காரணமாக இடம்பெயர்ந்திருக்கின்றார்கள். இந்நிலையில் தற்போது அவர்களுக்கு வாழ்வாதார பிரச்சினை எழுந்திருக்கின்றது. அந்தொ பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டபோது இங்கு மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் போதியளவு காணப்படுகின்றன. அங்கு விவசாயம் மேற்கொண்டதற்கான கிணறுகள், வயல்நிலங்கள், எஞ்சிய கட்டுமானங்கள் போன்ற பல விடயங்கள் காணப்படுகின்றன. அத்துடன் இவற்றுக்கான ஆவணங்களையும் அந்த மக்கள் வைத்திருக்கின்றார்கள். எனவே இவை போதுமானவையாக உள்ளன என நம்புகின்றேன். இந்த அடிப்படையில் பல்வேறுபட்ட இடங்களில் வன பரிபாலன திணைக்களத்திடமிருந்து காணிகளை விடுவித்து மக்களுக்கு கொடுத்திருக்கின்றோம்.

அந்த வகையில் வெல்வேரி மக்களுடைய காணிகளையும் விரைவில் வன பரிபாலன திணைக்களத்திடமிருந்து விடுவித்து மக்களின் வாழ்வாதாரத்திற்காக வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம்” – என்றார்.

திருகோணமலை – வெல்வேரி கிராமத்தில் பல தசாப்த காலமாக மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். இவர்கள் நாட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான வன்செயல் காரணமாக உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அங்கிருந்து தொடர்ச்சியாக இடம்பெயர்ந்தனர். தற்போது இவர்கள் மீள குடியமர்ந்து வருகின்றனர். 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்முறைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பின் காரணமாக மீண்டும் மீள குடியமர அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் 2010ஆம் ஆண்டுக்கு பின்னர் அந்தப் பகுதியில் வன வள பாதுகாப்பு திணைக்களத்தினால் எல்லைக் கற்கள் இடப்பட்டு அவை அந்தத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டிருந்தன. பின்னர் இந்தக் காணியை ஹெட்டியாராய்ச்சி என்ற தனிநபருக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அவர் அதில் எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை மேற்கொண்டிருக்கவில்லை.

1970 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே 30க்கு மேற்பட்ட குடும்பங்கள் அப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளன. வன வளப் பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள பகுதிக்குள் தாங்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்களாக வீட்டின் சிதைவுகள், சிமேந்தால் கட்டப்பட்ட சுமார் 10 அடி விட்டமுடைய பல கிணறுகள், நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்ட கால்வாய்கள் உட்பட பல ஆதாரங்களும் உள்ளன. தமது காணிகளுக்கான ஆவணங்களும் தம்மிடம் இருக்கின்றன எனப் பொதுமக்கள் குறிப்பிடுகின்றனர். அத்துடன் தமது காணியைச் சுற்றியுள்ள ஏனைய பகுதிகளில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் குறுகிய பரப்பளவைக் கொண்ட தமது காணிகள் மாத்திரம் வனவள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர்.








# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக சனியன்று மாலை மழைக்கு மத்தியிலும் ஆர்ப்பாட்டம்

**(கனகராசா சரவணன்)**

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையின் நிர்வாக சீர்கேட்டினால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டு வருகின்றனர். எனவே “அரசே! நிர்வாக சீரழிவிலிருந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையை மீட்டுத்தா!” என்ற கோரிக்கையை முன்வைத் தும் வைத்தியசாலை பணிப்பாளரை இடமாற்றுமாறு கோரியும் வைத்திய சாலைக்கு முன்னால் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலையில்கடந்தசிலமாதங் களாக தொடர்ந்து இடம் பெற்றுவரும் நிர்வாகச் சீர்கேட்டினால் நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாதுள்ளது எனத் தெரிவித்தும் வைத்தியப் பணிப்பா ளரை உடன் இடமாற்றக் கோரியும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர். இதையடுத்து வைத்தியசாலைக்கு முன்னாள் சனி மாலையில் கொட்டும் மழையில் மக்கள் ஒன்று திரண்டனர்.

இதன்போது “வைத்தியசாலையில் இடம்பெற்றுவரும் அடிதடி கலாச்சா ரத்தை உடன் நிறுத்து!”, “வைத்திய, பணிப்பாளரை உடன் வெளியேற்று!”, “நோயாளிகளின் உயிரோடு விளை யாடும் வைத்தியரை அதிகாரத்தில் இருந்து உடனடியாக நீக்கு!”, “வைத் திய அதிகாரியின் சட்டவிரோத நடவ டிக்கை தொடர்பில் நீதியான விசாரணை வேண்டும்” என்பன போன்ற வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அந்த பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. கொட்டும் மழையில் மாலை 4.30 மணிக்கு ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் மாலை 6.00 மணி வரை இடம்பெற்ற பின்னர் ஆர்ப்பாட காரர்கள் அங்கி ருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை ஜனாதிபதிக்கு இந்த வைத்தியசாலையில் இடம்பெற்ற சீர் கேடுகள் தொடர்பான மகஜர் ஒன் றைத் தாங்கள் அனுப்பி வைத்துள்ளனர் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.














# ச.தொ.ச. முன்னாள் மேலாளர் கைது: நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிரடி

ச.தொ.ச. நிறுவனத்தின் முன்னாள் போக்குவரத்து மேலாளர் இந்திக ரத்ன மலால நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துவதற்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



# கிருலப்பனை வீட்டுத்திட்டம் மீண்டும் ஆரம்பமாகின்றது

கிருலப்பனை, கொலம்பகே மாவத்தையில் 2022 பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த 615 வீடுகளைக் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டத்தை, புதிய ஒப்பந்த நடைமுறை ஊடாக மீண்டும் ஆரம்பித்து நிறைவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி எஞ்சியுள்ள கட்டுமானப் பணிகளை முடித்து, திட்டத்தை முழுமையாகப் பூர்த்தி செய்ய மேலதிகமாக 6 பில்லியன் ரூபா தேவைப்படும் என அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரங்க குணசேகர மற்றும் அதிகாரிகள் இந்த இடத்திற்கு நேரில் சென்று கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலைமையை ஆய்வு செய்தமை குறிப்பிடத்தக்கது.



# வளிமண்டலத்தில் தளம்பல் நிலை; இன்று முதல் மழை பெய்யக்கூடும்

நாட்டை அண்மித்த கிழக்கு வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக இன்று முதல் சில பகுதிகளில் மழை பெய்யக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களில் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய சில பகுதிகளில் இன்று 2 மணிக்கு பின்னர் மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய மலை நாட்டின் கிழக்கு சரிவு பகுதியிலும், வடக்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களிலும், கொழும்பு, கம்பஹா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 50 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## டித்வா சூறாவளி பாதிப்பு:

# 100 பாடசாலைகளை பயன்படுத்த முடியாது

டிட்வா சூறாவளியால் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 100 பாடசாலைகள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பாடசாலைகளில் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளதுடன், சில பாடசாலைகள் தொடர்ந்தும், பாதிக்கப்பட்ட மக்களை தங்கவைத்துள்ள முகாம்களாக செயற்படுகின்றன.

இந்த நிலையில், இந்த பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும், அருகிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வதில் ஏதேனும் சிக்கல்கள் காணப்படுமாயின், அது குறித்தும் ஆராய்வதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெள தெரிவித்துள்ளார்.



# மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை: 10 புதிய மருந்துகள் சந்தைக்கு அறிமுகம்

இந்த வருடத்தில் 10 புதிய மருந்து வகைகளைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் 4,000 மில்லியன் மாத்திரைகள் மற்றும் குளிசைகளை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக அந்தக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் 70 வகையான மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதேவேளை, வரலாற்றில் அதிகளவான மருந்து உற்பத்தியைக் கடந்த வருடம் முன்னெடுக்க அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் முடிந்துள்ளது.

அதற்கமைய 3,625 மில்லியன் மாத்திரைகள் மற்றும் குளிசைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட அதிகூடிய மருந்து உற்பத்தியான 385 மில்லியன் மாத்திரைகள் மற்றும் குளிசைகள், கடந்த வருடம் மார்ச் மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 5 புதிய மருந்துகள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், மருத்துவ விநியோகப் பிரிவு வழங்கிய அனைத்து கொள்வனவுக் கட்டளைகளையும் தட்டுப்பாடின்றி விநியோகிக்கவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

2025 ஆம் ஆண்டில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானம் 27.06 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்புத் துறைமுகத்தில் சிக்கியுள்ள கொள்கலன்கள்

## பெரும் நெரிசல் ஏற்படுவதாகத் தகவல்



திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் உரிய முறையில் மேற்கொள்ளப் படாததன் காரணமாகவே கொழும்பு துறைமுகத்தில் பெரும் நெரிசல் ஏற்படுவ தாக துறைமுகங்கள், கப்பல் போக்கு வரத்து துறை நிபுணர்கள் தெரிவித் துள்ளனர்.

இதனால், தமது சேவையின் நற் பெயருக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளதாக வும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், கப்பல் நிறுவனங்களும், தாமத கட்டணம் உள்ளிட்ட கூடுதல் செலவு களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டில், சாதனை அளவி லான கொள்கலன்கள் கையாளப்பட் டன.

எனினும், தற்போது ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக, எதிர்வரும் காலத்தில் பெரும் பாதிப்பை எதிர்நோக்க வேண்டியேற்படும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

முனையங்களுக்கு இடையே கொள் கலன்களை நகர்த்துவதற்கு சாதாரண முறைமையே பயன்படுத்தப்படுகிறது.

இந்த மந்தமான செயல்முறை காரண மாக ஒரு ஏற்றுமதிக்கு 1 லட்சம் முதல் 3 லட்சம் வரை மேலதிக செலவு ஏற்படுவ தாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு மற்றும் கிழக்கு கொள்கலன் முனையங் கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

எனினும், உபகரணங்கள் இல்லாமை மற்றும் கணனிமயமாக்கப்பட்ட ஒருங் கிணைப்பு இல்லாமை காரணமாக அவற்றின் செயல்திறன் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

இது தவிர, சர்வதேச ஆய்வகச் சான் றிதழ்கள் அதிகாரிகளினால் நிராகரிக் கப்படுவதனால், உள்ளூர் தர நிர்ணய நிறுவனங்களில் மீண்டும் சோதனை செய்ய வேண்டியுள்ளது.

இதன் காரணமாக துறைமுக தாமத கட்டணங்கள் அதிகரிப்பதுடன், பழுத டையக்கூடிய பொருட்களின் தரம் பாதிக் கப்படுவதாகவும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து துறை நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.



# ஆண்டின் முதல் 2 நாள்களில் 581 பேருக்கு டெங்குத் தொற்று

இந்த வருடத்தின் முதல் இரண்டு நாள்களில் டெங்கு நோயளர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகரித் துள்ளது.

அதன்படி, இரண்டு நாள்களில் மாத்திரம் 581 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சமூக மருத்துவர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்திலேயே அதி களவான டெங்கு நோயாளர்கள் பதி வாகியுள்ளனர் என அவர் குறிப்பிட் டுள்ளார்.

கடந்த காலங்களில் நிலவிய மழை யுடனான வானிலையால் டெங்கு குடம்பிகளின் பெருக்கம் அதிகரித் துள்ளது.

இந்த நிலையிலேயே, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதி கரித்து வருவதாக மருத்துவர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.




# திட்டமிட்டபடி கல்வி மறுசீரமைப்பு அமுலாகும்: 5 துறைகளின் கீழ் நடவடிக்கை என்கிறார் பிரதமர்

இலங்கையின் கல்வி முறையில் நீண்டகாலமாக நிலவி வரும் குறைபாடுகளை நீக்கி, மாணவர்களின் நடைமுறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் ஐந்து முக்கிய துறைகளின் கீழ் பாரிய கல்வி மறுசீரமைப்புகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளதாக கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை உறுதிப்படுத்தினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி மறுசீரமைப்புக்காக 2026ஆம் ஆண்டு பாதீட்டில் 24,986 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் பெரும் பகுதி, அதாவது 17,542 மில்லியன் ரூபா பாடசாலைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகச் செலவிடப்படவுள்ளது.

ஏனைய நிதியானது பாடத்திட்ட மேம்பாட்டிற்கு 6,084 மில்லியன் ரூபா, மனிதவள மேம்பாட்டிற்கு 1,026 மில்லியன் ரூபா, மதிப்பீட்டு முறைகளை நவீனமயப்படுத்த 298 மில்லியன் ரூபா மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களுக்கு 36 மில்லியன் ரூபா எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இதுவரை நடைமுறையிலிருந்த பரீட்சையை மாத்திரம் மையமாகக் கொண்ட மற்றும் பாடங்களை மனப்பாடம் செய்யும் முறைக்கு இந்த மறுசீரமைப்பு முற்றுப்புள்ளி வைக்கிறது.

ஒரு கருவியைப் பற்றிப் புத்தகத்தில் படித்து அதன் பாகங்களை மனப்பாடம் செய்வதை விட, அந்த கருவியை நேரடியாக இயக்கிப் பழகும் நடைமுறைத் திறனை மாணவர்களிடம் வளர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இதற்காகப் புதிய பாட அலகுகள் மற்றும் நவீன வகுப்பறைச் செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இந்தநிலையில், புதிய பாடத்திட்டங்கள் 2026ஆம் கல்வியாண்டில் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வருகின்றன.

அதன்படி, தரம் 6 மாணவர்களுக்கு ஜனவரி 21 ஆம் திகதியிலிருந்தும், தரம் 1 மாணவர்களுக்கு ஜனவரி 29ஆம் திகதியிலிருந்தும் புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

இவற்றுக்கு இணையாக, மாணவர்கள் புதிய பாடங்களைத் தெரிவு செய்தல் மற்றும் புதிய முறைமைக்கு அவர்களைத் தயார்படுத்துதல் போன்ற விழிப்புணர்வுத் திட்டங்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்காக முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த மறுசீரமைப்பை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக நாடு தழுவிய ரீதியில் 132,580 ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக 7,181 ஆசிரியர் பயிற்றுவிப்பு பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

தற்போது இந்தப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் 93 சதவீதமானோருக்கு பயிற்சிகள் முழுமையாக வழங்கி முடிக்கப்பட்டுள்ளன.

வெறும் பாடத்திட்ட மாற்றத்துடன் மாத்திரம் நின்றுவிடாமல், மாணவர்கள் இந்தப் புதிய முறைமைக்கு இசைவாக்கம் அடைவதற்கான விசேட வேலைத் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பாடத்தெரிவு மற்றும் புதிய மதிப்பீட்டு முறைகள் குறித்து மாணவர்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

அத்துடன், இந்தப் புதிய கல்வி முறைமை குறித்துப் பெற்றோர்களுக்குத் தெளிவுபடுத்தும் விழிப்புணர்வுத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

புதிய கல்வி மறுசீரமைப்புகளை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான பௌதீக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது." – என்று தெரிவித்துள்ளார்.



# வெனிசுவேலா மீதான தாக்குதலுக்கு மக்கள் விடுதலை முன்னணி கண்டனம்

வெனிசுவேலா மீது அமெரிக்கா நடத்திய இராணுவத் தாக்குதலை மக்கள் விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட நாடுகளைப் போலவே, வெனிசுவேலாவின் எதிர்காலம் குறித்தும் அதன் ஆட்சியாளர்கள் குறித்தும் தீர்மானிக்கும் முழுமையான அதிகாரம் அந்நாட்டு மக்களுக்கே உண்டு.

வெனிசுவேலாவின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்திற்காக மக்கள் விடுதலை முன்னணி என்றும் உறுதியாக நிற்கும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் பிற நாடுகள் இராணுவ ரீதியாகத் தலையிடுவதை ஏற்க முடியாது எனவும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.



# தேயிலை ஏற்றுமதியில் இலங்கையின் சாதனை

2024 உடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வளர்ச்சியை பதிவு செய்துள்ளது

இலங்கை தேயிலை சபையின் தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரை 239 மில்லியன் கிலோ கிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

2024 இதே காலப்பகுதியில் தேயிலை ஏற்றுமதி 223 மில்லியன் கிலோகிராமாக மாத்திரமே காணப்பட்டதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது.

தேயிலை ஏற்றுமதி வருமானம், 1.4 பில்லியன் ரூபாவால் உயர்ந்துள்ளது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது சுமார் 97 மில்லியன் அதிகரிப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.




# நாடுகளின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும்

## வெனிசுவேலா விவகாரத்தில் இலங்கையின் நிலைப்பாடு

வெனிசுவேலா நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும் வகையில் அமெரிக்கா முன்னெடுத்த இராணுவத் தலையீடு மற்றும் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் கைது குறித்து இலங்கை அரசாங்கம் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இதனை தெரிவித்தார்.

"ஐ.நா. சாசனம் மற்றும் சர்வதேச சட்டங்களின்படி, அனைத்து நாடுகளினதும் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும். அனைத்து ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடுகளும் இந்த விதிகளுக்குக் கட்டுப்பட்ட வேண்டியது கட்டாயமாகும்." என அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக் காட்டினார்.

இந்த விவகாரம் தொடர்பாக இன்று நடைபெறவுள்ள ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டத்தை தாமதமின்றி நடத்துமாறு இலங்கை தரப்பிலிருந்து முன்மொழியப்பட்டுள்ளது.

ஐ.நா. சாசனத்தின் அடிப்படை கொள்கைகளை முரணாக செயற்படுகின்றமை தொடர்பில் ஐ.நா. பொதுச் சபையிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை மக்கள் விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளமை குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத்,

"அரசாங்கம் என்பது வேறு, அரசியல் கட்சிகள் என்பது வேறு. அரசியல் கட்சிகள் தமக்கெனத் தனிப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருக்க முடியும்."- என்றும் கூறினார்.

## வெனிசுலா விவகாரம்:

# பிரச்சினைக்கு பேச்சுகள் மூலம் தீர்வுகாண இந்தியா வலியுறுத்தல்

“வெனிசுலா மக்களின் நலன் மற்றும் பாதுகாப்புக்கு இந்தியா தனது ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இப்பகுதியின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் வகையில் சம்பந்தப்பட்ட அனைவரும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்க்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.”

– இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும் அதிரடியாகக் கைது செய்த அமெரிக்கா, இருவரையும் நியூயோர்க்குக்கு கொண்டு சென்றுள்ளது. மேலும், வெனிசுலாவை அமெரிக்காவே தற்காலிகமாக ஆட்சி செய்யும் என்றும், அதன் பரந்த எண்ணெய் வளங்கள் மற்ற நாடுகளுக்கு விற்பனை செய்ய பயன்படுத்தப்படும் என்றும் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சர்வதேச அரசியலில் மிகப் பெரிய பரபரப்பை இது ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“வெனிசுலாவின் சமீபத்திய நிகழ்வுகள் ஆழ்ந்த கவலைக்கு உரியவை. இது தொடர்பான நிகழ்வுகளை இந்தியா உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

வெனிசுலா மக்களின் நலன் மற்றும் பாதுகாப்புக்கு இந்தியா தனது ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இப்பகுதியின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் வகையில் சம்பந்தப்பட்ட அனைவரும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்க்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.




வெனிசுலாவில் உள்ள இந்தியர்களுடன் தலைநகர் கராகஸில் உள்ள இந்திய தூதரகம் தொடர்பில் உள்ளது. மேலும், சாத்தியமான அனைத்து உதவிகளையும் அவர்களுக்கு அது தொடர்ந்து வழங்கும்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

“வெனிசுலாவில் ஏற்பட்டுள்ள சமீபத்திய நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு, அந்நாட்டுக்கான அத்தியாவசியமற்ற பயணங்களை தவிர்க்குமாறு இந்தியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வெனிசுலாவில் உள்ள அனைத்து இந்தியர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறும், தங்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இந்திய தூதரகத்தின் உழளெ.உயசயஉயளஅநய.பழஎ.ைை என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது அவசர தொலைபேசி எண்,58-412-9584288 (வட்ஸ் அப் அழைப்புகளுக்கும் பொருந்தும்) மூலம் காரகாஸில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பில் இருக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்” என தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# 2036 ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

## பிரதமர் மோடி தகவல்

2036 ஒலிம்பிக் போட்டிகளை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசியில் நேற்று தொடங்கிய 72 ஆவது தேசிய கைப்பந்து போட்டியை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் உரையாற்றிய நரேந்திர மோடி,

“தேசிய கைப்பந்து சம்பியன்ஷிப் இன்று முதல் வாரணாசியில் தொடங்குகிறது. வீரர்கள் மிகுந்த கடின உழைப்புக்குப் பிறகு இந்த தேசிய போட்டிக்கு வந்துள்ளனர். அவர்களின் முயற்சிகள் வரும் நாள்களில் வாரணாசி மைதானத்தில் வெளிப்படும். நாட்டின் 28 மாநிலங்களைச் சேர்ந்த அணிகள் ஒன்றுகூடி, “ஒரே பாரதம், உன்னத பாரதம்“ என்ற செய்தியை வழங்கியுள்ளன. வாரணாசி நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில், அனைத்து வீரர்களையும் வரவேற்று வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நாட்டில் பல்வேறு துறைகளில் தொடர்ந்து சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. விளையாட்டுத் துறையும் அவற்றில் ஒன்று. தேசிய விளையாட்டு நிர்வாகச் சட்டம், கேலோ பாரத் கொள்கை -2025 உள்ளிட்ட விளையாட்டுத் துறை சீர்திருத்தங்களை அரசு மேற்கொண்டுள்ளது. இது சரியான திறமையாளர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதுடன், விளையாட்டு அமைப்புகளில் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும்.

வலுவான உள்கட்டமைப்பை உருவாக்குதல், நிதி உதவி வழிமுறைகள், இளம் விளையாட்டு வீரர்களுக்கு உலகளாவிய பயிற்சியை வழங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் முயற்சிகளுடன், ஒலிம்பிக் பதக்க இலக்கு திட்டம் போன்ற முன்முயற்சிகள்



இந்தியாவின் விளையாட்டு சூழல் அமைப்பை மாற்றி வருகிறது.

கடந்த பத்தாண்டுகளில் 20 இற்கும் மேற்பட்ட முக்கிய சர்வதேச போட்டிகளை இந்தியா நடத்தியுள்ளது. 2030 கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறும். 2036 ஒலிம்பிக்கை நடத்த நாடு வலுவான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கேலோ இந்தியா திட்டத்தின் மூலம், நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தேசிய நிலைக்கு முன்னேற வாய்ப்பு கிடைத்துள்ளது.” என தெரிவித்தார்.

# நியூயோர்க் அழைத்துச் செல்லப்பட்ட மதுரோ தடுப்பு மையத்திற்கு அனுப்பப்பட்டார்




வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவும் அவரது மனைவியும் தடுப்பு மையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

நியூயோர்க் நகரத்திற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் அவர்கள் தடுப்பு மையத்திற்கு அனுப்பப்பட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி இருவரும் புரூக்ளினில் அமைந்துள்ள புகழ்பெற்ற மெட்ரோ பாலிட்டன் தடுப்பு மையத்தில் உள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை இலக்கு வைத்து அமெரிக்கா நடத்திய பாரிய இராணுவ நடவடிக்கையில், பொது மக்கள் மற்றும் இராணுவத்தினர் உட்பட குறைந்தது 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என 'நியூயோர்க் டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

வெனிசுவேலா உயரதிகாரி ஒருவர் வழங்கிய தகவலின்படி, ஜனாதிபதி மதுரோவை கடத்தும் நோக்கில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் 40 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

அமெரிக்காவின் தரைப்படை களமிறங்குவதற்கு முன்னதாக, வெனிசுவேலாவின் வான் பாதுகாப்பு மண்டலங்களை சிதைக்க 150 இற்கும் மேற்பட்ட அமெரிக்கப் போர் விமானங்கள் வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டன என தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அதிகாலை நடந்த இந்த அதிரடி நடவடிக்கையின் போது, நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியா புளோரஸ் ஆகியோரை அமெரிக்க படையினர் கைது செய்து, விமானம் மூலம் அமெரிக்காவிற்கு அழைத்துச் சென்றனர்.

# டொனால்ட் ட்ரம்புக்கு பாடம் எடுத்த ஐ.நா.



வெனிசுவேலாவில் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கை காரணமாக சர்வதேச கவனம் அங்கு குவிந்துள்ள நிலையில், ஐ.நா சாசனத்தைக் கடைப்பிடிப்பது என்பது கட்டாயமானது, அது ஒரு விருப்பத்தேர்வு அல்ல என்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் அன்னலெனா பேர்பக் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், அமைதியான நேரங்களிலும் சரி, நெருக்கடி காலங்களிலும் சரி, ஐ.நா சாசனம் சர்வதேச நடத்தைக்கான வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

வெனிசுவேலாவில் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கை உச்சத்தை எட்டியுள்ள இந்தச் சூழலைக் குறிப்பிட்டு அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“ஐ.நா சாசனம் என்பது ஒரு விருப்பத் தேர்வு அல்ல – அது அமைதி மற்றும் நெருக்கடி காலங்களில் நமது வழிகாட்டும் கட்டமைப்பாகும், இன்று வெனிசுவேலாவில் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கை உச்சத்தை எட்டியுள்ள சூழலிலும் அதுவே பொருந்தும்,” என்று பேர்பக் கூறினார்.

ஐ.நா சாசனத்தின் 2ஆவது பிரிவின்படி, அனைத்து உறுப்பு நாடுகளும் மற்றுமொரு நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிராக மிரட்டல் விடுப்பதையோ அல்லது பலத்தைப் பயன்படுத்துவதையோ தவிர்க்க வேண்டும் என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

“வலிமை உடையவனே நீதியாளன் என்ற கொள்கைக்குப் பதிலாகச் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டால் மட்டுமே, அனைவருக்கும் அமைதியான, பாதுகாப்பான மற்றும் நீதியான உலகம் சாத்தியமாகும்,” என்று அவர் கூறினார்.

மேலும், வெனிசுவேலா மக்களின் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், மனித உரிமை மீறல்களைத் தாண்டி உரிமைகள் நிலைநாட்டப்பட்டால் மட்டுமே நிரந்தர அமைதி சாத்தியம் என்றும் தெரிவித்தார்.

# அமெரிக்காவைக் கண்டிக்கும் வடகொரியா

வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமெரிக்கப் படைகளால் சிறைபிடிக்கப்பட்டமையை இறையாண்மை மீதான கடுமையான அத்துமீறல் என்று வடகொரியா கண்டித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து வடகொரிய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "வெனிசுவேலாவில் அமெரிக்கா முன்னெடுத்துள்ள இந்த மேலாதிக்க நடவடிக்கையை வடகொரியா வன்மையாகக் கண்டிக்கிறது" என்று தெரிவித்தார்.



“அமெரிக்காவின் முரட்டுத்தனமான மற்றும் கொடூரமான தன்மையை மீண்டும் ஒருமுறை இந்தச் சம்பவம் தெளிவாக உறுதிப்படுத்துகிறது” என்றும் அவர் மேலும் கூறினார்.

மதுரோ பதவியிலிருந்து அகற்றப்பட்டதை “ஐ.நா சாசனம் மற்றும் இறையாண்மை, தலையிடாமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் போற்றும் சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறும் செயல்” என்று வடகொரியா விபரித்துள்ளது.

மேலும், மற்ற நாடுகளின் இறையாண்மையை அமெரிக்கா வழக்கமாக மீறுவதற்கு எதிராக "முறையான எதிர்ப்பு மற்றும் கண்டனக் குரல்களை" எழுப்புமாறும் அது கேட்டுக்கொண்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -05.01.2026




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. பொறுமையுடன் இருந்தால் பல நன்மைகளைக் காணலாம். வெறுமை இருப்பது போன்ற உணர்வு காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த சூழ்நிலையை சமாளித்து அமைதி பெற லாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும். இன்று நீங்கள் திட்டமிட்டு பணியாற்றுவது மிகவும் அவசியம் .

உங்கள் துணையுடன் சகஜமாக இருக்க வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தக்க வைக்க முடியும்.

நிதி விஷயங்களில் விரும்பும் பலன்கள் கிடைக்காது. உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர் கள். எனவே திட்டமிட்டு பணத்தை கையாள வேண்டும்.

தேவையற்ற குழப்பங்கள் உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். அமைதியாக இருப்பது நல்லது.




இன்று சீரான பலன்கள் கிடைக்காது. சவால்களை சந்திக்க வேண்டிய சூழ் நிலை காணப்படும். நீங்கள் பொறுமையுடனும் திறமையுடனும் இதனைக் கையாள வேண் டும். தான தருமங்கள் போன்ற தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறலாம்.

சக பணியாளர்களுடன் சில அசௌகரியங்களை உணர்வீர்கள். இம்மாதிரியான அற்ப விஷயங்களை தவிர்த்து உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டி யது இன்று அவசியம்.

இன்று உங்கள் துணையுடன் பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது.

இன்று கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் ஏற்படும் அதிகப்படி செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது.




இன்று குழப்பங்களும் வருத்தமான மன நிலையும் காணப்படும். இன் றைய நாளை சமாளிக்க நீங்கள் அமைதி யுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படுவதால் நீங்கள் மும்மரமாக பணியில் ஈடுபட்டி ருப்பீர்கள். சக பணியாளர்களின் எதிர்ப்பை சந்திப்பீர் கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும். சிறப்பாக பணியாற்ற பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள் வீர்கள். இதனால் இருவரிடையே சூடான விவாதங் கள் ஏற்படும். இதனை தவிர்க்க நீங்கள் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

நிதி வளர்ச்சியில் தடைகள் காணப்படும். கையிலி ருக்கும் பணத்தை சேமிக்க வேண்டியது அவசியம். தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.




இன்று திருப்திகரமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை திட்டமிட்டு திறமையாக நடத்த வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிகள் கடோயாக யாருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத நிலை இருக்கும். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும்.

மன நிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவு காண இயலாது. உற வில் நல்லிணக்கம் காண அமைதியான போக்கை மேற் கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று சிறிது பதட்டம் காணப்படும். இதனால் கால் வலி ஏற்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் சாதகமான நாள். கடின உழைப்பு மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் லாபகரமான பலன்கள் கிடைக்கும். இது உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

நீங்கள் இன்று கடினமான பணிகளையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகா ரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்து ணர்வு ஏற்படும். இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று பணம் சேர்ப்பதற்கானஅதிர்ஷ்ட நிலை உள்ளது. இதனால் உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள்.

இன்று உங்களின் மன உறுதி காரணமாக உங்க ளின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் கிடைக்கும். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி உங்கள் முயற்சிகளில் வெற்றி காணலாம். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சியான் நாள்.

பணி தொடர்பான பயணம் காணப் படுகின்றது. குறித்தநேரத்தில் பணி களை முடிப்பதன் மூலம் உங்கள் திறமை வெளிப் படும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். பயணம் காணப்படுகின்றது. இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு வரும் பண வரவு வரப்பிரசாதமாக அமையும். எதிர்கால பாதுகாப் பிற்காக உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவன மாக இருக்க வேண்டும். சாதகமான பலன் கள் கிடைக்க கடினமான சூழ்நிலை களை கவனமாக கையாள வேண்டும். இசை கேட்டல் மற்றும் தியானம் மேற் கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ள தால் உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை மீண்டும் சரிபார்த்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

தகவல் தொடர்பில் காணப்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் பாதிப்பு ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

நிதியைப் பொறுத்தவரை எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. நீங்கள் எளிதில் உணர்ச்சிவ சப்படுவீர்கள். முடிவுகளை விரைந்து எடுப்பீர்கள். இதனால் பிரச்சினை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். உங்கள உங்கள் உணர்ச்சிகளை கட்டுப் படுத்துவதன் மூலம் சிறந்த பலனைக் காணலாம்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும். சக பணி யாளர்களிடமிருந்து சில தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நல்ல புரிந் துணர்விற்கு அனுசரணையான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும்.

# இன்றைய ராசி பலன்கள் -05.01.2026




உங்கள் வளர்ச்சிக்கு உதவும் முயற்சிகளை எடுக்க இன்றைய நாள் சாதகமாக உள்ளது. உங்கள் இலக்குகள் நிறைவேறும். திருப்தியும் நல்ல உணர்வும் உங்களிடம் இன்று காணப்படும்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு திருப்தி அளிக்கும். சாதித்தது போன்ற உணர்வு உங்களிடம் காணப்படும். எனவே நீங்கள் சிறப்பாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதற்கு உகந்த நாள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துன்றவும் மகிழ்ச்சி யும் வளரும்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பண வரவு ஏற்பட்டு பணம் சேர்க்க இயலும்.

நல்ல சுறுசுறுப்பு மற்றும் மனதிடம் காரணமாக இன்று உங்களிடம் ஆற்றல் நிரம்பி இருக்கும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எதிர்பாராத வரவுகளும் வெற்றியும் கிடைக்கும் நாள். புத்தி சாலித்தனத்தை பயன் படுத்துவதன் மூலம் அதிகம் சாதிக்கலாம்.

பணியில் உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறித்த நேரத்துக்கு முன்பே பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

நீங்கள் உங்கள் துணையிடம் சந்தோஷமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சீராக இருக்கும். காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு கண்டு மகிழ்வீர்கள்.

உங்களின் ஆற்றல் மற்றும் திடமான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கவனமாகக் கையாள வேண்டிய கடினமான சூழ்நிலைகள் காணப்படும். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது சில போராட்டங்களை சந்திப்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை நீங்கள் சந்திப்பீர்கள். இதனால் அவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை அவ்வளவு திருப்திகரமாக காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் காரணமாக முதுகுவலி காணப்படும். மனதை தெளிவாக வைப்பதன் மூலம் சிறப்பாக உணரலாம்.




இன்று அதிர்ஷ்டம் காணப்படும் நாள். திருப்திகரமான பலன்கள் கிடைக்கும் சாதகமான நாள். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

பணியில் உங்கள் நேர்மை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணியில் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நம்பிக்கை ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இதனால் உங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களின் ஆற்றல் அதிகரித்து காணப்படும்.

# பருத்தித்துறையில் கைக்குண்டு மீட்பு!



பருத்தித்துறை, கொட்டடி மீன்சந்தைப் பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடற்கரை வான் அகழ்வின்போது வெளிப்பட்ட மணல், கொட்டடி மீன்சந்தைப் பகுதியில் வீதியோரமாக அணைமயில் கொட்டப்பட்டிருந்தது. அதற்குள் இருந்தே இந்தக் கைக்குண்டு நேற்று முன்தினம் அவதானிக்கப்பட்ட நிலையில், அது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு மீனவர்கள் தகவல் வழங்கினர்.

பொலிஸார் மேற்கொண்ட மேலதிக நடவடிக்கையின் அடிப்படையில், அந்தக் கைக்குண்டு விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டு, மணற்காட்டுப் பகுதியில்வைத்துபாதுகாப்பாகவெடிக்கவைக்கப்பட்டது.